சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

**முன்னிலை: திரு.P.S. ரஸ்கின் ராஜ், B.A., L.L.B.,**

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி

2023ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10-ம் நாள் செவ்வாய்க்கிழமை.

அசல் வழக்கு எண்.253/2020

**(*CNR TNMD240003972020*)**

சின்னன் ….. வாதி

**/** எதிர் **/**

1.காமேஷ்வரி என்ற சத்தியா

2.மைனர் பிரஸ்திகா

3.மைனர் ஜெயவிஷ்ணு

4.அன்னலெட்சுமி

(2, 3 பிரதிவாதிகள் இளவர் என்பதால் அவரது தாயாரும் இயற்கை பாதுகாவலருமான 1ம் பிரதிவாதி மூலம் )

….. பிரதிவாதிகள்

இந்த வழக்கு இந்நீதிமன்றம் முன்பு 24.08.2023 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.குபேந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 3ம் பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.C.ஜக்கையன் அவர்கள் முன்னிலையாகியும், 4ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.கிருஷ்ணன் அவர்கள் முன்னிலையாகியும், பின்பு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய முன்வராததால் ஒருதலைபட்சமாக கருதப்பட்டும், வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டு இதுவரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து

வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ஒருதலைபட்ச

**<u>தீர்ப்புரை</u>**

வாதிக்கு பிரதிவாதிகள் ரூ.4,78,650/-ம், வழக்கு தாக்கல் செய்த நாள்முதல் தீர்ப்பாணை நாள் வரை 12% வருட வட்டியுடனும், தீர்ப்பு தேதியிலிருந்து மேற்படி அசல் தொகை ஈடாகும் வரை 6% வட்டியுடனும், வாதிக்கு செலுத்த கோரியும், வழக்கு செலவுத்தொகை கோரியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1**. வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு :**

*1.1.* வாதியும் இறந்துபோன பாலமுருகன் என்பவரும் இடையப்பட்டியை சேர்ந்த சக்கரை மகன் தன்னப்பன் என்பவர் மூலம் நன்கு அறிமுகமாகி நெருங்கி பழகி நட்புடன் இருந்து வந்துள்ளார்கள். வாதி வீட்டிற்கு வந்து இறந்துபோன பாலமுருகன் கடந்த 28.05.2020ம் தேதி அவசர நிமித்தம், முன் கடன் தீர்க்கவும், குடும்ப செலவுக்காகவும், நெல் வியாபாரத்தை அபிவிருத்தி செய்யவும் வாதியிடம் கடனாக பணம் ரூ.4,50,000/- கடனாக கேட்டார். வாதி இறந்துபோன பாலமுருகனுக்கு ரொக்கமாக பணம் ரூ.4,50,000/- கொடுத்தார். இறந்துபோன பாலமுருகன் அதே நாளில் 28.05.2020ம் தேதியிலேயே சாட்சிகள் முன்பு ரூ.4,50,000/-க்கு ரூ.100/-க்கு 1% வட்டி வீதம் வட்டியும், அசலும் திருப்பி தருவதாக ஒப்புக்கொண்டு வாதி பெயருக்கு இறந்துபோன பாலமுருகன் சாட்சிகள் முன்பு ஒரு புரோநோட்டு எழுதி கையொப்பம் செய்து கொடுத்துள்ளார். வாதிக்கு பிரதிவாதி அசலோ,

வட்டியோ திரும்ப செலுத்தவில்லை. வாதிக்கு பணத்தை திரும்ப செலுத்த இறந்துபோன பாலமுருகன் யாதொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்நிலையில் பாலமுருகன் கடந்த 01.11.2020ம் தேதி உடல்நல குறைவால் 1 முதல் 4 பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். வாதி பிரதிவாதிகளிடம் பலமுறை நேரில் சென்று பாலமுருகன் கடன் பெற்ற பணத்தை திரும்ப செலுத்தக்கோரி நேரில் கேட்டபோது பிரதிவாதிகள் சாக்குபோக்கு சொல்லி காலம் கடத்தி வந்தார்கள். வாதி பலமுறை கேட்டும் பிரதிவாதிகள் பணத்தை திருப்பி தராததால் வாதிக்கு தரவேண்டிய கடன் தொகை அசல் மற்றும் வட்டியுடன் சேர்த்து பிரதிவாதிகள் செலுத்த வேண்டும் என வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2. <u>1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரை சுருக்கம்:-</u>**

*2.1.* வாதி மேற்படி பிராதில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை. வாதிக்கும் பாலமுருகனுக்கும் நல்ல பழக்கவழக்கம் இருந்தது என்றும் வாதியிடம் பாலமுருகன் கடந்த 28.05.2020ம் தேதி வழக்கில் உள்ள தொகையை பெற்றார். கடந்த 01.11.2020ம் தேதி உடல்நல குறைவு ஏற்பட்டு இறந்துவிட்டார். வாதி பிராதில் குறிப்பிட்டுள்ள தேதியானது கொரானா நோய் பரவும் அபாய கால கட்டமாக இருந்தது. வாதிக்கு எங்கிருந்து எந்த வருமானத்தில் மூலம் கிடைக்கப்பெற்றது எந்த இடத்தில் வைத்து பாலமுருகனுக்கு பணம் கொடுத்தார் என்பது அனைத்தும் வாதி நீதிமன்றத்தில் ஆவண சாட்சிகளோடு நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். வாதி மற்றும் பல நபர்கள் பாலமுருகனின்

வாரிசுகளான வழக்கின் பிரதிவாதிகள் மீது உசிலம்பட்டி துணை கண்காணிப்பாளரிடம் பொய்யான புகார் கொடுத்துள்ளார். வாதி வைத்துள்ள புரோநோட்டில் கண்ட பாலமுருகனின் கையொப்பம் வாதியால் உற்பத்தி செய்யப்பட்டது என்றும் மோசடி செய்து பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. புரோநோட்டை வாதி பொய்யாக உற்பத்தி செய்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதி துாய கரங்களோடு நீதிமன்றத்தை அணுகவில்லை. எனவே வாதியின் வழக்கை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்பது ஆகும்.

3. **<u>4ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரை சுருக்கம்:-</u>**

*3.1.* வாதி பிராதில் பொய்யான சங்கதிகளை கூறி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதி தரப்பில் செய்துள்ள முதலாவது ஆவணமானது வாதியால் பொய்யாக உற்பத்தி செய்த ஆவணமாகும். வாதி தாக்கல் செய்துள்ள முதல் ஆவணமான புரோநோட்டில் உள்ள கையொப்பம் 4ம் பிரதிவாதியின் மூத்த மகன் பாலமுருகன் கையொப்பமில்லை. 4ம் பிரதிவாதி பாலமுருகனுடன் வாதியை எப்போதும் எந்த காலத்திலும் சேர்ந்து பார்த்தது கிடையாது. வாதி பொய்யாக உற்பத்தி செய்து தாக்கல் செய்த வாதி தரப்பு ஆவணத்தில் சொல்லிய தொகைக்கு பாலமுருகன் பொறுப்பாக மாட்டார். 1ம் பிரதிவாதி புத்தி சுவாதீனமில்லாதவர். ஆதலால் 1ம் பிரதிவாதிக்கு எந்த முடிவும் எடுக்க முடியாத சூழ்நிலையில் உள்ளார். 2, 3ம் பிரதிவாதிகள் இளவர்கள் ஆவார்கள். 4ம் பிரதிவாதியின் மகன் பாலமுருகன் உசிலம்பட்டியில் உள்ள இந்தியன் ஒவர்சீஸ் வங்கியில் நகைகளை அடமானம் வைத்துள்ளார். அடமான நகையை மாற்றி வைப்பதற்கு அடமான நகையை மீட்டுவதற்கு நோட்டீஸ் 1ம் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

பாலமுருகன் வைப்பு கணக்கில் ரூ.5லட்சம் இருப்பு பணமாக இருக்கிறது. ஆனால் ரூ.4லட்சத்திற்கு மேல் பிரதிவாதிகள் நகைக்கடன் செலுத்த வேண்டியுள்ளது. வாதி தாக்கல் செய்த தாவா வழக்கினை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்பது ஆகும்.

4. இவ்வழக்கின் வழக்குரை, எதிர்வழக்குரை பரிசீலிக்கப்பட்டு, வழக்கு பிரச்சனைக்கு தீர்வுகாண கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

1.வாதிக்கு இறந்துபோன பாலமுருகன் எழுதிக்கொடுத்த 28.05.2020ம் தேதியிட்ட புரோநோட்டு உண்மையானதா, செல்லத்தக்கதா?

2.தாவா தொகையை வாதி பிரதிவாதிகளிடம் வசூலித்து பெற உரியவரா ?

3.இதர பரிகாரம் மற்றும் செலவுத்தொகை குறித்து உத்தரவு என்ன ?

5. வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பில் மற்றொரு சாட்சியாக வா.சா.2 விசாரிக்கப்பட்டுள்ளார். பிரதிவாதிகள் தரப்பில் சாட்சி விசாரிக்கப்படவில்லை. சான்றாவணம் குறியீடு செய்யப்படவில்லை.

**6. எழுவினா எண்.1, 2 க்கான தீர்வு:-**

*6.1.* முதலாவதாக வாதியின் வழக்கானது இறந்து போன 1ம் பிரதிவாதியின் கணவர் பாலமுருகன் வாதியிடமிருந்து குடும்ப தேவைக்காக கடந்த 28.05.2020ம் தேதியில் ரூ.4,50,000/- கடன் பெற்றார். மேற்படி தொகைக்கு மாதம் ரூ.100/-க்கு 1ரூ வட்டி கொடுப்பதாக உறுதிக்கூறி கடன்

பத்திரம் எழுதி கொடுத்தார். மேற்படி பாலமுருகன் 01.11.2020ம் தேதியன்று உடல்நல குறைவால் இறந்துவிட்டார். இந்த பிரதிவாதிகள் மேற்படி பாலமுருகனின் வாரிசுகள் என்பது ஆகும். பாலமுருகன் எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் 28.05.2020ம் தேதியிட்ட கடனுறுதிச்சீட்டு வா.சா.ஆ.1ஆக குறியீடு செய்தார். மேற்படி புரோநோட்டில் உள்ள 2வது சாட்சி வா.சா.2 ஆக சாட்சியம் அளித்தார். பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை மேற்படி புரோநோட்டு பாலமுருகன் எழுதிக்கொடுக்கவில்லை எனவும், குடும்ப தேவைக்கு அவர் கடன் வாங்கவில்லை என கட்சி செய்தாலும் அதனை தெளிவுப்படுத்துவதற்கு பிரதிவாதிகள் தரப்பில் எந்த சான்றாவணமும் இல்லை. ஆக வா.சா.ஆ.1 ஆவணப்படி இறந்துபோன பாலமுருகன் வாதியிடமிருந்து ரூ.4,50,000/- கடன் பெற்றுக்கொண்டு 28.05.2020ம் தேதியில் வா.சா.ஆ.1 புரோநோட்டை எழுதிக்கொடுத்துள்ளார் என்பது வாதி தரப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால் இந்த பிரதிவாதிகள் இறந்துபோன பாலமுருகன் வாரிசுகள் என்பதால் மேற்படி கடன் தொகையும் அதற்குரிய வட்டியும் வாதிக்கு பிரதிவாதிகள் திரும்ப செலுத்த கடமைப்பட்டவர்கள் என **எழுவினா 1, 2**க்கு வாதிக்கு ஆதரவாக தீர்வு காணப்படுகிறது.

**7. <u>எழுவினா எண். 3 க்கான தீர்வு:-</u>**

வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு ஆதரவாக கிடைக்கத்தக்கது என **எழுவினா 3க்கு** தீர்வு காணப்படுகிறது.

இறுதியாக வாதியின் வழக்கு செலவு தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, பிரதிவாதிகள் தனித்தனியாகவோ, கூட்டாகவோ வாதி கோரிய தொகை ரூ.4,78,650/-ஐ வாதிக்கு செலுத்தவேண்டும். மேற்படி அசல் கடன் தொகை ரூ.4,50,000/-ஐ வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்பு தேதி வரை 9% வட்டியுடனும், தீர்ப்பு தேதியிலிருந்து மேற்படி அசல் தொகை ஈடாகும் வரை 6% வட்டியுடனும் வாதிக்கு பிரதிவாதிகள் செலுத்தவேண்டுமென்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து - தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் மேற்கொண்டு இன்று 2023-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 10-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2023.10.13 17:19:15 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

**<u>வாதி தரப்பு சாட்சிகள் :-</u>**

வா.சா.1 சின்னன்

வா.சா.2 ராஜ்திலக்

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:-</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 28.05.2020 | கடனுறுதிச்சீட்டு |

**<u>பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் :</u>**

– இல்லை --

**<u>பிரதிவாதிகள் தரப்பில் சான்றாவணங்கள்:-</u>**

– இல்லை ---

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2023.10.13 17:19:24 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.